# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,

சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 1059/2016

ஆணை எண். 010/2017

நாள் : 18/01/2017

திருமதி. ஏ. அலமேலு,
சென்னை – 600 099..

-- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் –3,
சென்னை மாநகராட்சி

-- எதிர் மனுதாரர்

சென்னை, கல்பாளையம், பெருமாள் கோயில் தெரு, எண்.33 முகவரியில் வசிக்கும் திருமதி ஏ. அலமேலு அவர்களின் 13.10.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.10.2016 அன்று பெறப்பட்டு1059/2016 எண்ணுள்ள முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட அசல் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகின்றது :-

## ஆணை

சென்னை, கல்பாளையம், பெருமாள் கோயில் தெரு, எண்.33 முகவரியில் வசிக்கும் திருமதி ஏ. அலமேலு அவர்கள் தனது பூர்வீக கிராமம், கல்பாளையம் கிராமத்தில் புல எண்.1448/4–ல் எஞ்சியுள்ள 6.5 சென்ட் நிலத்தினை திரு சண்முகராயன் என்பவர் போலி ஆவணம் பத்திரப்பதிவு செய்ததை, பொன்னேரி கோட்டாட்சியர் விசாரணை மூலம் மீட்டெத்து, அவர் பெயரில் இருந்த பட்டா இரத்து செய்யப்பட்டு தன்பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். தனக்கு பாத்தியப்பட்ட மேற்குறிப்பிட்ட நிலத்தில் திரு சண்முகராயன் என்பவர் அனுமதியின்றி கட்டிடம் கட்டி வருவதாகவும், இது குறித்து புழல் காவல்நிலையத்தில் புகார் செய்தும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். மேலும், அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டிடத்தை அகற்றுவதற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் தெரிவித்தும், சென்னை மாநகராட்சி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை குறித்து, சென்னை மாநகராட்சி 3–வது மண்டல அலுவலர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரிடம் முறையே 11.11.2016 மற்றும் 14.11.2016 நாட்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி விசாரணையில் மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட இடத்தில் கட்டிடம் கட்டிவரும் திரு சண்முகராயன் அவர்களிடம் கட்டிட வரைபடம் தாக்கல் செய்ய கோரியதாகவும், உரிய கால அவகாசத்திற்குள் கட்டிட வரைபடம் தாக்கல் செய்யாத நிலையில், மேற்படி தலத்தில் உள்ள கட்டிடத்தை, பூட்டி முத்திரை வைக்க 09.11.2016 அன்று தாக்கீது வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

3. மேலும், ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி வரும் திரு சண்முகராயன் அவர்களுக்கு வழங்கப்பட்ட 30 நாட்கள் காலஅவகாசம் முடிந்தவுடன் 28.12.2016 அன்று நண்பகல் 12.30 மணிஅளவில் சம்பந்தப்பட்ட கட்டிடம் பூட்டப்பட்டு முத்திரை வைக்கப்பட்டுள்ளதாக மண்டல அலுவலர் 28.12.2016 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

4. இந்நேர்வில், அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடம் பூட்டி முத்திரையிடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக சென்னை மாநகராட்சி கட்டிட விதிகளின்படி தொடர் நடவடிக்கை மேற்கொண்டு இறுதியான அறிக்கையை 60 தினங்களுக்குள் சமர்ப்பிக்கும்படி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

20/1/2017
செயலாளர்.

13.1.17

13/1/17

பெறுநர்

மண்டல அலுவலர்,
மண்டலம் –3,
சென்னை மாநகராட்சி,
எண்.1, தட்டான் குளம் சாலை,
மாதவரம், சென்னை – 60.

திருமதி. ஏ. அலமேலு,
எண். 33, பெருமாள் கோயில் தெரு,
கல்பாளையம்,சென்னை – 600 099..